பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
20 02 2025 **THURSDAY** 6 30 **PM**

வணக்கம் – மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிப் பொறுப்பில் உள்ள மாநிலங்களின் முதலமைச்சர்கள் கூட்டம் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

2. நாடு முழுவதும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தொற்றா நோய்க்கான பரிசோதனை மேற்கொள்வதற்கான சிறப்பு இயக்கத்தை மத்திய அரசு இன்று தொடங்கியுள்ளது.

3. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண கூட்டு பணிக்குழு கூட்டத்திற்கு அழைப்பு விடுக்குமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கை கட்டுக்குள் கொண்டுவர உறுதியான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

5. ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி பட்டம் வென்றார்.

<<<<<<>>>>>>

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிப்பொறுப்பில் உள்ள மாநிலங்களின் முதலமைச்சர்கள் கூட்டம் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

மத்திய அமைச்சர்கள் திரு ஜெ.பி. நட்டா, திரு.அமித் ஷா உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தொற்றா நோய்க்கான பரிசோதனை மேற்கொள்வதற்கான சிறப்பு இயக்கத்தை மத்திய அரசு இன்று தொடங்கியுள்ளது.

தொற்றா நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து உரிய சிகிச்சை வழங்கும் நோக்கில், இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

புற்றுநோய், இரத்த அழுத்தம் உள்ளிட்ட தொற்றா நோய்களை கண்டறிவதற்காக இந்த இயக்கம் நடத்தப்படுவதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த செலவில் உயரிய சிகிச்சை வழங்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று திருவனந்தபுரத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மருத்துவ உபகரணங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்பவர்களுக்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக தெரிவித்தார்.

நகர்புறங்களுக்கு ஈடான மருத்துவ வசதிகள் கிராமப்புறங்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

ராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர்கள் 10 பேர் இலங்கை கடற்படையினரால் நேற்று மீண்டும் சிறைபிடிக்கப்பட்டுள்ளதை அவர் அக்கடித்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பிரச்சினை தொடர்பாக அமைக்கப்பட்ட கூட்டு பணிக்குழுவின் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்க மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திரு மு.க.ஸ்டாலின் அந்த கடித்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மக்களின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்யும் அரசாக திமுக அரசு திகழ்கிறது என்று துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு வீட்டு மனை பட்டாக்களை வழங்கி அவர் பேசினார்.

மாநிலம் முழுவதும் 86 ஆயிரம் பட்டாக்களை ஆறு மாதத்திற்குள் வழங்குவதற்கென மாநில மற்றும் மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதையும் திரு உதயநிதி ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கை கட்டுக்குள் கொண்டுவர உறுதியான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இன்று சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக சட்டம் - ஒழுங்கு ஏ டி ஜி பி- சுற்றறிக்கை வெளியிட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இதற்கு பின்னரும் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுகிறது என்று உண்மைக்கு மாறான தகவலை தெரிவிக்காமல் உறுதியான நடவடிக்கைகளை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு அண்ணாமலை கோரியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் அண்மை காலமாக நடைபெற்றுவரும் பாலியல் குற்றங்கள் கவலையளிப்பதாக உள்ளது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலர் திரு முத்தரசன் கூறியுள்ளார்.

தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஷெட்யூல்டு வகுப்பினருக்கு எதிரான தாக்குதல்களும் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

இவற்றை தடுக்க மாநில அரசு கூடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதுபோன்ற சம்பவங்கள் தமிழகத்திற்கு தலைகுனிவை ஏற்படுத்துவதாகவும் திரு முத்தரசன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியது தொடர்பாக திமுக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிகையில், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியது தொடர்பாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை வழங்கி வருவதாக குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு 99 சதவீத வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாக கூறிய முதலமைச்சர், தற்போது 90 சதவீத வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக, கடந்த நான்காண்டுகளில் நிறைவேற்றப்பட்ட வாக்குறுதிகள் குறித்து விரிவான வெள்ளை அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்றும் திரு ராமதாசு அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

<<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை, தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார், புதுதில்லியில் இன்று சந்தித்து பேசினார்.

தலைமை தேர்தல் ஆணையராக பதவியேற்ற பிறகு மரியாதை நிமித்தமாக திரு ஞானேஷ்குமார், குடியரசுத் தலைவரை சந்தித்து பேசியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனைத் தொடர்ந்து திரு. ஞானேஷ்குமார், குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கரையும் சந்தித்து பேசினார்.

<<<<<<>>>>>>

கடலோர காவல்படைக்கு ஆயிரத்து 120 கோடி ரூபாய் மதிப்பிலான உபகரணங்களை பெல் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் பாதுகாப்புத்துறை கையெழுத்திட்டுள்ளது.

பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதாக பாதுகாப்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அதிநவீன தகவல் தொடர்பு சாதனங்களை கொள்முதல் செய்வதற்கு இந்த ஒப்பந்தம் வகை செய்வதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல், 697 கோடி ரூபாய் மதிப்பில் பாதுகாப்புப்படைகளுக்கு கனரக வாகனங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தமும் இன்று கையெழுத்திடப்பட்டுள்ளதாக மற்றொரு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சென்னை ஐ ஐ டி-யில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான இரண்டு நாள் கண்காட்சி வரும் 28-ஆம் தேதி தொடங்கவுள்ளதாக அதன் இயக்குனர் திரு காமகோடி கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - காமகோடி – **56** செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கோவையில் புதுப்பிக்கப்பட்ட ஆம்னி பேருந்து நிலையத்தை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு இன்று திறந்து வைத்தார்.

<<<<<<>>>>>>

விரிவான சிற்றுந்து திட்டம் குறித்து மதுரை, கோவை, திருநெல்வேலி, விருதுநகர் ஆகிய மண்டலங்களுக்கு உட்பட்ட போக்குவரத்து அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம் மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் தலைமையில் இன்று மதுரையில் நடைபெற்றது.

<<<<<<>>>>>>

நாமக்கல் மாவட்டத்தில் மாநில அரசு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் திருமதி உமா இரண்டாவது நாளாக இன்றும் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<<>>>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வேளாண்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திரு பிரசாந்த் தலைமையில் இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>>

ஐயா வைகுண்டரின் பிறந்த தினத்தை முன்னிட்டு அடுத்த மாதம் 4-ஆம் தேதி தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி பட்டம் வென்றார்.

தோஹாவில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் அவர் ஈரானின் **Amir Sarkhoshi** –ஐ வென்றார்.

<<<<<<>>>>>>

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா வெற்றிபெற 229 ரன் என்ற இலக்கினை பங்களாதேஷ் நிர்ணயித்துள்ளது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த பங்களாதேஷ் 49 புள்ளி நான்கு ஓவரில் 228 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

**Towhid Hridoy** சதம் அடித்தார்.

முஹமது சமி அபாரமாக பந்துவீசி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

**<<<<<<>>>>>>**

தேசிய பாரா தடகள சாம்பியன் போட்டி சென்னையில் இன்று நிறைவடைகிறது.

கடைசி நாளான இன்று ஆடவர் வட்டு எறிதல் பிரிவில் தமிழகத்தின் அலெக்சாண்டர் மணியும், மகளிர் ஈட்டி எறிதல் பிரிவில் நேத்ராவதி ஈஸ்வரனும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

சீனாவில் நடைபெற்று வரும் ஆசிய கோப்பை டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஹர்மித் தேசாய், ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற்றார்.

**<<<<<<>>>>>>**

பாங்காக்கில் நடைபெற்று வரும் ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Kushal Dalal**-லும், மகளிர் ஒற்றையர் பிரிவில் **Basanti Mahato**–வும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<>>>>>>**

புனே சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சாகேத் மைனேனி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது

**<<<<<<>>>>>>**

சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு பிரிவுகளில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் இந்தியாவின் சார்பில் 30 பேர் பங்கேற்கவுள்ளனர்.

<<<<<<END>>>>>>